# நோர்வே தூதரகமும் சர்வதேச தொழிலாளர் தாபனமும் நலிவுற்ற குழுக்களுக்கான பொருளாதார நல்வாழ்வினை ஏற்படுத்துவதற்காக ஒன்றிணைகின்றன.

*இப்புதியதிட்டத்திற்கான முதலீடு 1.9மில்லியன் அமெரிக்கடொலர்கள்: இத்திட்டம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஒதுக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கௌரவமான தொழில்வாய்புக்களை உருவாக்குவதற்கு முன்னுரிமையளிக்கின்றது. இதனது முதற்கவனமானது, விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைசார் பெறுமதிச்சங்கிலிகளை ஆதரிப்பதனூடாக விருத்தியடைந்துவரும் மற்றும் அனைவரையும் உள்வாங்கிய பொருளாதார நிலைமையினை இலங்கையின் வடமாகாணத்தில் எய்துதலாகும்.*

*கொழும்பு, வியாழன் - 10 நவம்பர், 2022 -* நோர்வே தூதரகமும் சர்வதேச தொழிலாளர் தாபனமும் புதிய ஓர்அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டத்திற்கான உடன்படிக்கையினை இன்று கைச்சாத்திட்டனர், இது கௌரவமான தொழில்வாய்ப்பினையும் மற்றும் வாழ்வாதாரத்தினையும் குறிப்பாக வடமாகாணத்தில் உள்ள நலிவுற்ற குழுக்களான பெண்தலைமையேற்ற குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் இளைஞர்களுக்கான பொருளாதார நல்வாழ்வினை உண்டுபண்ணுவதனை நோக்காகக்கொண்டது. **Promoting Advancement of Vulnerable Persons and Enterprises (PAVE) -** (பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மக்களினதும் தொழிற் துறைகளினதும் முன்னேற்றத்தினை ஊக்குவித்தல்), குறித்த இத்திட்டமானது அனைத்துத்தரப்பினரையும் உள்வாங்கிய வளர்ச்சி, தனியார்துறைமுதலீடு, தொழிற்துறைகளை அதிகரித்தல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றினை பிரதானமாகக் கொண்டுள்ளதுடன் இது விவசாய மற்றும் மீன்பிடித்துறைசார் பெறுமதிப்புச்சங்கிலிகளை ஆதரிப்பதனூடாக அமுல்படுத்தப்படும்.

**PAVE** திட்டமானது ILO வினது ஒரு தசாப்தத்திற்கும் மேலான மோதலினால் பாதிக்கப்பட்ட மற்றும் அனைத்துதரப்பினரையும் உள்வாங்கிய அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கான அனுபவங்களின் அடிப்படையில் கட்டியமைக்கப்படதாகும். **PAVE** திட்டமானது இன்னும் மூன்று வருடங்களின் **100** புதிய தொழிற்துறைகளையும், ஏலவே உள்ள **100** தொழிற்துறைகளை விஸ்தரிப்பதளையும் இலக்காக் கொண்டது. அத்துடன் **3000** தனிநபர்களுக்கான வருமானத்தை உருவாக்கவும் அதிகரிக்கவும் நேரடியான பங்காற்றும். தேர்வுசெய்யப்பட்ட பெறுமதிசேர்சங்கிலிகளிலுள்ள பெரிய நிறுவனங்களுக்கு இப் பிரதேசங்களில் ஆலைகளை நிறுவுவதற்கான ஆதரவளித்தல், காலநிலை ஸ்மாட் விவாசாய முறைமைகளை அறிமுகம்செய்தல், தற்போதுள்ள சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்துறைகளின் இயலளவினை அபிவிருத்தி செய்தல், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறைகள் வணிகமேம்பாட்டுச் சேவைகள் மற்றும் நிதியினைப் பெற்றுக்கொள்ளுதலினை பலப்படுத்துதல், மேலும் டிஜிரல் மற்றத்திற்கான மாறுதல் என்பவற்றினை **PAVE** திட்டம் தனது செயற்பாடுகளினது கருவூலமாகக் கொண்டது.

இப்பங்காண்மை பற்றிக் கூறும்போது, இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் Chargée d'affaires a.i., **கில்டே கன்சன்**, ILOவுடனானன இத்தொடர்ச்சியான பங்காண்மை தொடர்பாக பெரிதும்மகிழ்வதாக குறிப்பிட்டார். "இத்திட்டமானது நோர்வேயினது பிராந்திய அபிவிருத்தி இலக்குகளுடன் குறிப்பாக சிறிய விவசாயிகளிடையே காலநிலை ஸ்மாட் விவசாய விஸ்தரிப்பினூடாக பசி மற்றும் உணவுக்கான பாதுகாப்பினை உறுதிசெய்யதல், பால்நிலை சமத்துவத்தினை ஊக்குவித்தல், நிலையான பொருளாதார அபிவிருத்திக்காக தொழில் மற்றும் வறுமை ஒழிப்பு என்பனவற்றுடன் நொருங்கிய தொடர்புடையது", அவர் மேலும் குறிப்பிட்டார் "சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறைகளை பாதுகாத்தல் முக்கியமானது எனநாம் நாம் நம்புபிக்றோம். ILOவினையும் மற்றும் தனியார்துறையினரையும் - அவர்களது நலிவுற்ற

சமுகமுன்னேற்றத்திற்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்களுக்காக இத்தருணத்தில் பாராட்டுகின்றோம "

" முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியினை இலங்கை எதிர்கொள்ளும் இவ்வேளையில் நோர்வேயினது கௌரவமான தொழில்வாய்ப்பினையும் மற்றும் வாழ்வாதாரத்தினையும் குறிப்பாக வடமாகாணத்தில் உள்ள நலிவுற்ற ஆண்கள், பெண்கள் மாற்றும் மாற்றுத்திறனாளிகளுகக்காக உருவாக்குவதற்குமான தொடர்ச்சியான அர்ப்பணிப்பணிப்பினையும் இப்பங்காளித்துவத்தினையும் ILO பெரிதும் பாராட்டுகின்றது " என்று இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்காக ILO பணிப்பாளர், **சிம்ரன் சிங்** குறிப்பிட்டார்.

இவ் **PAVE** திட்மானது ILO வினது போருக்குபிந்திய பிரதேசங்களில் கொளரவமான தொழில் வாய்ப்புகளையும் அனைத்துதரப்பினரையும் உள்வாங்கிய வளர்ச்சியினையும் மற்றும் நல்லிணக்கத்தினையும் உண்டுபண்ணுவதற்கான நிகழ்ச்சிநிரல்களில் ஒன்றாகும். இத்துடன் இது இலங்கை எதிர்கொள்ளும் நிதி மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கானவோர் பங்களிப்பாகவும் உள்ளது.